## வெயாங்கொடை மேம்பால செயற்திட்டம் - 2014

வெயாங்கொடை மேம்பால செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) ஸ்பெயினின் பான்கோ பில்பாவோ விஸ்கயா ஆர்ஜன்டரியா எஸ்ஏ வங்கிக்கும் (பீபீவிஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2012 மார்ச் 13 ஆம் திகதிய 2012015/எஸ்எல் ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 1 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல் நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் படி, முன்னைய நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சும் தற்போதைய நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சும் நிறைவேற்றல் முகவராகவும், வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவும் உள்ளது. வெயாங்கொடை மேம்பாலத்தின் வடிவமைப்பு, வழங்கல் மற்றும் நிர்மாணித்தல் என்பன செயற்த்திட்டத்தின் நோக்கமாகும். செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 2,433 மில்லியன் ஆனதுடன் அதில் யூரோ 11.2 மில்லியனிற்குச் சமனான ரூபா 1,814.25 மில்லியன் ஸ்பெயினிலுள்ள பான்கோ பில்பாவோ விஸ்கயா ஆர்ஜன்டரியா, எஸ்.ஏ வங்கி(பீபீவிஏ) நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் தனது நடவடிக்கைகளை 2012 ஒக்தோபர் 23 இல் ஆரம்பத்திருந்ததுடன் 2013 திசெம்பர் 22 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியல்படுத்தப்பட்டது. செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2013 நவம்பர் 08 இல் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவுசெய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 1.4. கணக்காய்வாளரின் பொறுப்பு

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தன. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் ஏற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுக்கொண்டேன். ஆகையினால், எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவீனங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கத்தின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியிலான செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்தான கொள்வனவுகள் இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா

என்பதும்,

(ஈ) செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும் ,

(எ) கடன் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கப்பட்டுள்ளனவா என்பதும் ஆகும்.

## 2 <u>நிதிக்கூற்றுக்கள்</u>

### 2.1 <u>அபிப்பிராயம்</u>

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2014 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டதோ அந்த நோக்கங்களுக்காகவே அது பயன்படுத்தப்பட்டிருந்தது என்றும் ,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்தவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் முன்வைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கி நடக்கப்பட்டிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 <u>நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்</u>

#### 2.2.1 <u>கணக்கீட்டுக் குறைபாடுகள்</u>

செயற்பாடு, நிதியிடல் மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலை தெளிவாக வகைப்படுத்தி காட்டும் வகையில் செயற்திட்டத்தினுடைய காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

செயற்திட்டத்தின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள், மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான மீளாய்வாண்டின் செயற்திட்ட நிதிகளின் பயன்பாடு போன்றவை தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகைகள் | | மீளாய்வாண்டிற்காக பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | 2014 திசெம்பர் 31இல் உள்ளவாறு | |
| | யூரோ மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | யூரோ மில் | ரூபா மில் |
| நன்கொடை முகவர் | 11.22 | 1,883.00 | - | - | 11.22 | 1883.00 |
| இலங்கை அரசாங்கம் | 3.28 | 550.00 | 15.80 | 15.73 | - | 78.45 |
| | 14.50 | 2,433.00 | 15.80 | 15.73 | 11.22 | 1,961.45 |

### 3.2 பௌதிக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேம்பாலத்தினுடைய நிர்மாணத்தை 2013 திசெம்பர் 22 இல் பூர்த்தி செய்வதற்கு பட்டியலிடப்பட்டிருந்ததுடன் 2013 நவம்பர் 08 இல் பூர்த்தி செய்யப்பட்டு வீதி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2014 திசெம்பர் 31 வரை 45 காணித் துண்டுகள் சுவீகரிக்கப்பட்டிருந்ததுடன் காணிச் சுவீகரிப்பு சட்டத்தின் 44 ஆம் பிரிவின் படி காணிப்பதிவாளரிடம் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டிருந்தது. கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, மேம்பாலத்தினுடைய நிர்மாணத்திற்காக 28 காணித் துண்டுகளை சுவீகரித்ததன் காரணமாக ஏற்பட்ட நட்டஈட்டினை செலுத்துவதில் ஏற்பட்ட தாமதத்திற்காக வட்டியாக ரூபா 5,336,873 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

3.3 ஒப்பந்த நிர்வாகம்

மெடிவத்த வீதியில் டீஎல இற்கு குறுக்காக உள்ள கூட்டு விரைவு பாலத்தினுடைய (Compact Quick Bridge) புனரமைப்பிற்கு முரணாக ரூபா 7,620,572 தொகை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டிருந்தது. பாலத்தினுடைய அத்தியாவசியத்தன்மையானது வடிவமைப்பு கட்டத்திலேயே இனங்காணப்பட்டிருந்தால் இந்த முரணைத் தவிர்த்திருக்கவோ அல்லது குறைத்திருக்கவோ இயலுமானதாயிருந்திருக்கும்.

3.4 விதிவிலக்கான நடவடிக்கைகள்

2014 சனவரி 16 இல் நடைபெற்ற மேம்பாலத்தினுடைய திறப்பு விழாவிற்காக இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட பங்களிப்பில் ரூபா 4,359,185 தொகை செயற்திட்டத்தால் செலவழிக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டிருந்தது.